


## 4. சங்க மருவிய கால இலக்கியத் தகவல்கள்

- சங்க மருவிய கால இலக்கியங்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், நீதிநூல்கள், அறநூல்கள் என்பன எல்லாம் ஒன்றே
- சங்க மருவிய காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை
- சங்க மருவிய காலத்தில் தமிழ்நாட்டை ஆண்டவர்கள் களப்பிரர்கள்
- இதற்கு 'இருண்ட கால இலக்கியம்' என்ற பெயரும் உண்டு
- புறச் சமயங்களான சமணமும் பௌத்தமும் மேலோங்கி இருந்த காலம்
- வச்சிரணந்தியின் திராவிட சங்கத்தில் இயற்றப்பட்டவை பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என்று சிலர் கருதுவர்
- பதினெண் – 18, கீழ் – சிறிய, கணக்கு – நூல், இலக்கியம்

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

- அடி நிமிர்பு இல்லாச் செய்யுட் தொகுதியால் அற பொருள் இன்பத்தைப் பாடுவது கீழ்க்கணக்கு என்று இதன் இலக்கணத்தைப் பன்னிருபாட்டியல் கூறுகிறது.
- நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணை முப்பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம் இன்னிலை காஞ்சியோடு ஏலாதி என்பவே கைந்நிலை வாங்கீழ்க் கணக்கு
- இப்பதினெட்டு நூல்களையும் தொகுத்தவர் தொகுப்பித்தவர் பற்றி ஏதும் தெரியவில்லை
- பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் அனைத்தும் வெண்பா யாப்பில் ஆனவை

## 1. நாலடியார்

- வேளாண்வேதம், நாலடி நானூறு என்றும் வழங்கப்படும் நூல்
- பாண்டிநாட்டுச் சமணமுனிவர்கள் இயற்றியது
- தொகுத்தவர் பதுமனார்
- அதிகாரம் வகுத்தவர் பதுமனார்
- முப்பாலாகப் பகுத்தவர் தருமர்
- உரைகண்டவர்கள் பதுமனாரும், தருமரும்
- அறத்துப்பால் 13 அதிகாரம், பொருட்பால் 24 அதிகாரம், காமத்துப்பால் 3 அதிகாரம்
- நாலடியாரில் மொத்தம் 40 அதிகாரங்களும் 12 இயல்களும் உள்ளன.
- துறவறவியல் முதலில் உள்ளது
- பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள ஒரே தொகை நூல் நாலடியார்
- முத்தரையரைப் பற்றிக் கூறும் நூல் நாலடியார்
- கீழ்க்கணக்கில் திருக்குறளுக்கு அடுத்துப் புகழ்பெற்ற நூல் நாலடியார்
  "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
  நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி"
  "பழகு தமிழ் சொல்லருமை நால் இரண்டில்"
  இவற்றுள் நால் என்பது நாலடியாரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும்.
- நாலடியாரை ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

### மேற்கோள்

***"ஞாலம் புகலும் கொடுத்தானைக் கோட்டமுகும்***
***மஞ்சள் அழகும் அழகல்ல..."***
***"கல்வி அழுகே அழகு"***
***"போய்ப்பொருள் தேட்டறியீர்; கற்பவர் நாள்நில"***
***"பால் உண்டி அமைவுடைய கற்பவே, நீர் ஒழிபுப்***
***பெரியவர் குருகின் தெரிந்து"***

*"வரிசை வேண்மை பிறைபோல நாளும்*
*வரிசையவாய நந்தும் – வரிசையால்"*

## 2. நான்மணிக் கடிகை

- கடிகை என்றால் துண்டு (பகுதி) என்று பொருள். கட்டுவடம் (Neckless) என்ற பொருளும்; ஆபரணம் என்ற பொருளும் உண்டு
- ஒவ்வொரு பாடலிலும் நான்கு மணியான கருத்துகள் கூறப்பட்டுள்ளன.
- ஆசிரியர் விளம்பிநாகனார்
- வைணவர்
- 4ஆம் நூற்றாண்டு
- மொத்தம் 104 பாடல்கள்
- ஜி.யு. போப் இரண்டு பாடல்களை (7,100) ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

### மேற்கோள்

*"யார் அறிவார் நல்லான் பிறக்கும் குடி"*
*"இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசைநடுக*
*தன்னொடு செல்வது வேண்டின் அறம் செய்க*
*வெல்வது வேண்டின் வெகுளிவிடல்"*
*"இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்*
*வனமில்லாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்"*
*"ஈன்றானோடு எண்ணக் கடவுளும் இல்"*
*"கொண்டானிற் சிறந்த கேளிர் பிறர் இல்"*
*மனைக்கு விளக்கம் மடவாள்*
*மடவாளுக்கு விளக்கம் புதல்வர்*
*புதல்வர்க்கு விளக்கம் கல்வி*
*கல்விக்கு விளக்கம் புகல்சால் உணர்வு (ஒழுக்கம்)*
*நிலத்துக்கு அணி நெல்லும் கரும்பும்*
*குளத்துக்கு அணி தாமரை*
*பெண்ணுக்கு அணி நானம்*
*"தடமென் பணைத் தோள் தவிர் இயலாரை*
*விடமென்று உணர்தல் இனிது"*

## 3. இன்னாநாற்பது

- ஆசிரியர் கபிலர்
- சைவர்
- 4ஆம் நூற்றாண்டு
- மொத்தப் பாடல்கள் 40 (இன்னிசை வெண்பாக்கள்)
- துன்பம் கொடுக்கும் செயல்களைத் தொகுத்துக் கூறும் நூல்
- மொத்தம் 164 இன்னாச் செயல்கள் கூறப்பட்டுள்ளன

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

**மேற்கோள்**

***"உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பு இன்னா"***
***"தீமையுடையார் அருகில் இருத்தல் இன்னா"***
***"ஊனைத் தின்று ஊனைப்பெருக்கல் முன்இன்னா"***
***"குழவிகள் உற்றபிணி இன்னா"***
***"இன்னா பொருள் இல்லாமார் வண்மை புரிவு"***

## 4. இனியவை நாற்பது

- ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்
- சைவர்
- 5ஆம் நூற்றாண்டு
- மொத்தப் பாடல் 40
- இதன் கடவுள் வாழ்த்து சிவன், திருமால், பிரமன் என்ற மூவரையும் வணங்குகிறது
- இவை இவை இனிமை என்று அறங்கள் தொகுத்துச் சொல்லப்பட்டுள்ளன.
- மொத்தம் 124 இனிய செயல்கள் கூறப்பட்டுள்ளன.

**மேற்கோள்**

***"ஊனைத்தின்று ஊனைப்பெருக்காமை முன்இனிதே"***
***"ஒப்பமுடிந்தால் மனைவாழ்க்கை முன் இனிது"***
***"வருவாய் அறிந்து வழங்கல் இனிது"***

- பெண்ணை இழிவுபடுத்தி நஞ்சாகக் கருதும் வழக்கத்தை முதன் முதலாகக் கூறிய நூல் இனியவை நாற்பது

## 5. கார்நாற்பது

- ஆசிரியர் மதுரைக் கண்ணன் கூத்தனார்
- 5 ஆம் நூற்றாண்டு
- 40 வெண்பாக்கள்
- அகநூல்
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒருதிணையை (முல்லை) மட்டும் பாடிய நூல்
- முல்லைத் திணை ஒழுக்கமாய் இருத்தல் பற்றிக் கூறுகிறது
- ஒவ்வொரு பாடலிலும் கார்கால வருணனை வருகிறது
- தலைவன், தலைவி, தோழி, பாங்கன் என்ற நால்வர் மட்டுமே இதனுள் வருகின்றனர்
- பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள அக நூல்கள் ஆறனுள் மிகச் சிறியது

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- நன்னூல் உரையாசிரியராகிய மயிலைநாதர் இந்நூலில் இருந்து சான்று காட்டியுள்ளார்

### *மேற்கோள்*

> "***செல்வர் மனம்போல் கவின் ஈன்ற, நல்கூர்ந்தார் மேனிபோல் புல்என்ற காடு***"
> "***தூதோடு வந்த மழை***"
> "***பாடுவண்டு ஊதும் பருவம் பணைத்தோளி வாடும் பசலை மருந்து***"
> "***கெடாஅப் புகழ்வேட்கை செல்வர் மனம் போல் படாஅ மழிழ்வண்டு பண்முரலும்***"

### 6. களவழி நாற்பது

- ஆசிரியர் பொய்கையார்
- இலக்கிய வரலாற்றில் நான்கு பொய்கையார் உள்ளனர்

1. சேரமன்னன் கோக்கோதை மார்பனைப் பாடிய சங்ககால பொய்கையார்
2. பதினெண்கீழ்க் கணக்கில் களவழி நாற்பது, இன்னிலை என்ற நூல்களை இயற்றிய பொய்கையார்
3. நாலாயிரத்திவ்வியபிரபந்தத்தில் முதலாம் திருவந்தாதி பாடிய முதல் ஆழ்வாராகிய பொய்கையாழ்வார்
4. பன்னிரு பாட்டியல் என்ற பாட்டியல் நூலில் நூற்பாக்களை இயற்றிய பொய்கையார்

- மொத்தம் 40 பாடல்கள்
- பதினெண்கீழ்க் கணக்கில் புறப்பொருள் பற்றிக் கூறும் ஒரே நூல்
- 40 பாடல்களிலும் களம் என்ற சொல் வருவதால் இந்நூல் களவழி நாற்பது என்று பெயர் பெற்றது
- களம் பாடுவதில் போர்க்களம் பாடுதல், ஏர்க்களம் பாடுதல் என இருவகை உண்டு. இது போர்க்களம் பாடியது
- ஒவ்வொரு பாடலும் அட்டகளத்து(அ) பொருதகளத்து என முடிகிறது
- இந்நூல் சோழனைச் சிறப்பிக்கிறது
- சோழனால் சிறையில் அடைக்கப்பட்ட சேரனை விடுவிக்கப் பாடப்பட்ட நூல் என்று கூறுவர்
- இந்நூலில் குறிக்கப்படும் மன்னர்கள்: சோழன் செங்கணான், சேரன் கணைக்கால் இரும்பொறை
- இருவருக்கும் போர் நிகழ்ந்த இடம் கழுமலம்
- சேரன் சிறையில் அடைக்கப்பட்ட இடம் குடவாயிற் கோட்டம்
- இச் சேரன்தான் நீர்கேட்டுத் தாமதமாகப் பெற்று மானம் கருதி உயிர்விட்டவன்

- இச்சேரன்தான் "குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்" என்று புறநானூற்றுப் பாடலை எழுதியவன்
- இந்நூல் நால்வகை படையுள் யானைப் போரைச் சிறப்பித்துக் கூறுகிறது
- கார்த்திகைத் திருவிழா குறித்து இந்நூல் கூறுகிறது
- கலிங்கத்துப் பரணி போன்ற பிற்கால நூல்களுக்கு வழிகாட்டியாக அமைந்த நூல் களவழி நாற்பது.

### மேற்கோள்

*"கடிகாவில் காற்று உற்று எறிய, வெடிபட்டு*
*விற்றுவிற்று ஓடும் மயிலினம் போல் நாற்றிசையும்*
*கேளிர் இழந்தார் அலறபவே, செங்கண்*
*சினமால் பொருத களத்து"*

## 7. ஐந்திணை ஐம்பது

- ஆசிரியர் மாறன் பொறையனார்
- 4ஆம் நூற்றாண்டு
- அகநூல்
- திணைக்குப் 10 பாடலாக மொத்தம் 50 பாடல்கள் உள்ளன
- முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்ற வைப்பு முறையை உடையது
- முல்லைத் திணையை முதலாகக் கொண்ட கீழ்க்கணக்கு நூல் இது மட்டுமே ஆகும்

### மேற்கோள்

*"வெஞ்சுடர் அன்னானையான்கண்டேன் கண்டாளாம்*
*தண்சுடர் அன்னாளைத் தான்"*
*"கலைவாய்ப் சிறுநீரை எப்தாது என்று எண்ணிப்*
*பிணைமான் இனிது உண்ண வேண்டிக்– கலைமான்தன்*
*கன்னத்தின் ஊச்சும் சுரம் என்பர் காதலர்*
*உள்ளம் படர்ந்த நெறி"*

## 8. ஐந்திணை எழுபது

- ஆசிரியர் மூவாதியார்
- சைவர்
- 5ம் நூற்றாண்டு
- அகநூல்
- திணைக்குப் 14 பாடலாக மொத்தம் எழுபது பாடல்கள் உள்ளன
- குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற வரிசையை உடையது

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

***மேற்கோள்***

*"நன்மலை நாட! மறவல் வயங்கிழைக்கு*
*நின்னலது இல்லையால் ஈயாபோ கண்ணோட்டத்தி*
*இன்னுயிர் தாங்கும் மருந்து"*

## 9. திணைமொழி ஐம்பது

- ஆசிரியர் கண்ணன் சேந்தனார்
- 5ஆம் நூற்றாண்டு
- அகநூல்
- திணைக்குப் பத்துப் பாடலாக 50 பாடல்கள் உள்ளன
- 46 பாடல்கள் இன்னிசை வெண்பா
- குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசையை உடைய நூல்

***மேற்கோள்***

*"அரிபரந்த உண்கண்ணாள் ஆற்றாமை நும்மின்*
*தெரிவார்யார் தேடும் இடத்து"*
*"துனிகடல் சேர்ப்பன் தறந்தான்கொல் தோழி!*
*தணியும் என்தோள் வளை"*

## 10. திணைமாலை நூற்றைம்பது

- ஆசிரியர் கணிமேதாவியார்
- சமணர்
- ஏலாதி என்ற நூலை இயற்றியவரும் இவரே
- அகநூல்
- திணைக்கு 30 பாடலாக 150 பாடல்கள் உள்ளன
- குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்ற வரிசை உடையது
- இந்நூற் கருத்துகள் சுந்தரர் தேவாரத்திலும்; மாணிக்க வாசகரின் திருக்கோவையாரிலும் இடம் பெற்றுள்ளன.

***மேற்கோள்***

*"ஒரு சுடரும் இன்றி உலகு பாழாக*
*இருசுடரும் போந்தன என்பார்"*
*"பொருள் பொருள் என்றால் சொல் பொன்போலப் போற்றி*
*அருள் பொருள் ஆகாமியாக – அருளால்*
*வளமை கொணரும் வகையினால் மற்றோர்*
*இளமை கொணர இசை"*
*"நான்வேங்கை பொன்விளையும் நன்மலைநன்நாட!*
*கோன்வேங்கை போல்கொடியார் என்இயன்மார்,*

*– கோன்வேங்கை*
***அன்னையால் நீயும், அருந்தழையாம் ஏலாமைக்கு***
***என்னையோ? நாளை எனிது."***

## 11. முப்பால் – (திருக்குறள்)

- முப்பால் என்பது திருக்குறள்
- உத்திரவேதம், தெய்வ நூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொதுமறை, திருவள்ளுவப் பயன், திருவள்ளுவம் என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.
- ஆசிரியர் திருவள்ளுவர்
- வள்ளுவநாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகன், மாதாநுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர், பொய்யில் புலவன் என்ற வேறு பெயர்களும் இவருக்கு உண்டு
- அதிகாரம் 133
- மொத்த பாடல்கள் 1330. அனைத்தும் குறள் வெண்பாக்கள்
- அறத்துப்பால் 38 அதிகாரங்களை உடையது (பாயிர இயல் 4, இல்லறவியல் 20, துறவியல் 13, ஊழியல் 1)
- பொருட்பால் 70 அதிகாரங்களை உடையது (அரசியல் 25, அங்கவியல் 32, குடியியல் 13)
- காமத்துப்பால் 25 அதிகாரங்களை உடையது (களவியல் 7, கற்பியல் 18) 38 + 70 + 25 = 133 அதிகாரங்கள்
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் அதிகப் பாடல்களையும் அடிகளையும் கொண்ட நூல் திருக்குறள்
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அதிக அறங்களைச் சொல்லும் நூல் திருக்குறள்
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் செய்யுளால் (பாவால்) பெயர்பெற்ற ஒரு நூல் திருக்குறள்
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் குறள் வெண்பாவால் (1 3/4 அடி) ஆன ஒரே நூல் திருக்குறள்
- 'அ' கரத்தில் தொடங்கி 'ன' கரத்தில் முடியும் நூல்
- திருக்குறளின் சிறப்பை எடுத்துக்கூறும் நூல் திருவள்ளுவமாலை
- தமிழ்மாதின் உயிர் என்று போற்றப்படும் நூல்
- திருவள்ளுவரின் உருவத்தை முதன்முதலாக ஓவியமாக வரைந்தவர் வேணுகோபால சர்மா.
- இவ் ஓவியத்தில் திருவள்ளுவர் அமர்ந்த நிலையில் ஒரு கையில் ஏடும், மறுகையில் எழுத்தாணியைக் கொண்டு தாடியுடன் இருக்கின்றார்.
- சிவசிவ வெண்பா, தினகர வெண்பா, வடமலை வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா, குமரேச வெண்பா போன்றனவும் குறளின் சிறப்பையே கூறுகின்றன.
- திருக்குறளை முதல் முதலாகப் பதிப்பித்தவர் மலையத்துவசன்

- திருக்குறளை முதல் முதலாகத் பதிப்பித்தவர் மகன் ஞானப்பிரகாசம், 1812. அம்பலவாணத்தம்பிரான் என்றும் சிலர் கூறுவர்.
- பரிமேலழகர் உரையுடன் முதல் முதலாகத் திருக்குறளைப் பதிப்பித்தவர் இராமநாதன கவிராயர், 1840

**உரைகள்**

- தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிமேலழகர், பரிதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் என்ற பத்துப்பேரும் முதலில் உரை கண்டவர் ஆவர்
- பரிமேலழகர் உரையே மிகச் சிறந்தது ஆகும்
- மணக்குடவர், பரிமேலழகர், பரிதி, பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய இவரின் உரை மட்டுமே கிடைத்துள்ளது
- இராமானுஜக் கவிராயர், திரு.வி.க., நாமக்கல் ராமலிங்கனார், சரவண பெருமாள் ஐயர், தண்டபாணி தேசிகர் அரசஞ் சண்முகனார், புலவர் குழந்தை, பாரதிதாசன், மு.வரதராசனார், நாவலர் நெடுஞ்செழியன், போன்றோர் பிற்காலத்தே உரை எழுதியவர்களில் குறிப்பிடத்தக்கவர்.
- திருக்குறள் உரைவளம் – தருமபுர ஆதீன வெளியீடு, ஐவரின் பழைய உரை
- திருக்குறள் உரைக் கொத்து – திருப்பனந்தாள் வெளியீடு, ஐவரின் பழைய உரையுடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் சேர்ந்தது
- திருக்குறள் உரைக்களஞ்சியம் – மதுரைப் பல்கலைக் கழக வெளியீடு
- திருக்குறள் உரைவளம் – தண்டபாணி தேசிகர்
- திருக்குறள் உரைக்களஞ்சியம் – தண்டபாணி தேசிகர்
- திருக்குறள் நுண்பொருள் மாலை–காகிரத்தினக் கவிராயர்
- திருவள்ளுவ மாலை – பலர் பாடியது
- திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு – கி.வா. ஜகந்நாதன்
- வள்ளுவம் – வ.சுப. மாணிக்கம்
- வாழும் வள்ளுவம் – வ.செ. குழந்தைசாமி
- வள்ளுவர் கண்ட நாடும் காமமும் – தெ.பொ.மீ.
- திருக்குறள் மணிவிளக்க உரை (பெரு விளக்க நூல்) – க. அப்பாதுரையார்
- திருக்குறள் நடையியல் – இ. சுந்தரமூர்த்தி
- சொல்வலை வேட்டுவர் – இ. சுந்தரமூர்த்தி

**மொழிபெயர்ப்பு**

- லத்தீன் – வீரமா முனிவர்
- ஜெர்மன் – கிரால்
- ஆங்கிலம் – ஜி.யு. போப்
- பிரெஞ்சு – ஏரியல்

- வடமொழி – அப்பா தீட்சதர்
- இந்தி – பி.டி. ஜெயின்
- தெலுங்கு – வைத்யநாத பிள்ளை
- திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த இந்தியர் கே.எம்.பாலசுப்பிரமணியம்

### *மேற்கோள்*

***"அறத்தான் வருவதே இன்பம்"***
***"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறம்"***
***"திருவேறு தெள்ளியராதலும் வேறு"***
***"பெண்ணிற் பெருந்தக்க யாவுள"***
***"ஊழிற் பெருவலி யாவுள"***
***"முயற்சி திருவினை ஆக்கும்"***
***"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்***
***செயற்கரிய செய் கலாதார்"***
***"இடுக்கண் வருங்கால் நகுக"***
***"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்று அதன்***
***பின்சாரப் பொய்யாமை நன்று"***
***"கனியிருப்பக் காய் கவர்ந்தற்று"***
***"பண்புடையார் பட்டுண்டு உலகு"***
***"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்"***
***"அறிவு அற்றம் காக்கும் கருவி"***

## 12. திரிகடுகம்

- மருந்தின் பெயரால் பெயர் பெற்ற நூல்
- திரி என்றால் மூன்று; கடுகம் என்றால் காரம் உள்ளது என்று பொருள். அவை சுக்கு, மிளகு, திப்பிலி.
- ஆசிரியர் நல்லாதனார்
- வைணவர்
- 100 பாடல்கள் உள்ளன
- ஒவ்வொரு பாடலும் மூன்றாம் அடியில் 'இம் மூன்றும்' (அல்லது) 'இம் மூவர்' என வருகிறது

### *மேற்கோள்*

***"நெஞ்சம் அடங்குதல் வீடாகும்"***
***"வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்"***
***"தாளாளன் என்பான் கடன்பட வாழாதான்"***
***"நிறை நெஞ்சம் உடையானை நல்குரவு அஞ்சும்"***
***"நட்பின் கொழுமுலை பொய் வழங்கின் இல்லாகும்"***
***"கொண்டான் குறிப்பறிவான் பெண்டாட்டி"***
***"நல்விருந்து ஓம்பலின் நட்டானாம்; வைகலும்***

*இல்லும் செய்தலின் ஈன்றதாய் – தொல்குடியின்
மக்கள் தொடரின் மனைக்கிழத்தி இம் மூன்றும்
நற்புடையான் பூண்ட கடன்"*

## 13. ஆசாரக் கோவை

- ஒழுக்கங்களை அடுக்கிக் கூறும் நூல்
- ஆசிரியர் பெருவாயில் முள்ளியார்
- சைவர்
- 100 பாடல்கள்
- அன்றாட வாழ்க்கையில் செய்யும் சிறுசிறு செயல்களையும் எந்த முறையில் செய்ய வேண்டும் என்று விரிவாகக் கூறும் நூல்
- குறள்வெண்பா சிந்தியல் வெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா, பஃறொடை வெண்பா எனப் பலவும் கலந்த நூல்

### மேற்கோள்

*"விருந்தினர் மூத்தோர் பசுநிறை பிள்ளை
இவர்க்கு ஊண் கொடுத்தல்லால் உண்ணாரே என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்"
"கைப்பன எல்லாம் கடை, தலை திந்திப்ப
மெச்சம் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க முறைவகையால் ஊண்"
"பகல் தெற்கு நோக்கார் இராவடக்கு நோக்கார்
பகற்பொய்யார் நீயுளுள் நீர்"
"உமிழ்வும் உயர்ந்துழி ஏறலும் பாக்கும்
வகையில் உரையும் வளர்ச்சியும் ஐந்தும்
புணரார் பெரியார் அகத்து"*

## 14. பழமொழி நானூறு

- ஆசிரியர் முன்றுறை அரையனார்
- சமணர்
- 34 அதிகாரங்களில் 400 பாடல்களைக் கொண்டது
- ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஒரு பழமொழி உள்ளது
- இதன் பழமொழிகள் அனைத்தும் இலக்கியப் பழமொழிகள் ஆகும்
- தொல்காப்பியர் பழமொழியை 'முதுசொல்' என்று குறிப்பிடுகிறார்
- சங்ககால மன்னர்கள், புலவர்கள், மூவேந்தர்கள் பற்றிய குறிப்புகளைக் கொண்ட நூல்
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் வரலாற்றை மிகுதியாகத் தரும் நூல்

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- நீதி நூல்களுள் திருக்குறள், நாலடியாருக்கு அடுத்துப் புகழ் பெற்ற நூல்

*மேற்கோள்*

> "***நறு இயைந்த சொல்லின் வனப்பே வனப்பு***"
> "***பேதைக்கு உரைத்தாலும் செல்லாது உணர்வு***"

## 15. சிறுபஞ்ச மூலம்

- மருந்தால் பெயர் பெற்ற நூல்
- பஞ்சம் என்றால் ஐந்து என்று பொருள்
- மூலம் என்றால் வேர் என்று பொருள்
- வேரால் பெயர் பெற்ற நூல்
- ஐந்து வேர்களாவன; கண்டங்கத்திரி வேர், சிறு வழுதுணை வேர், சிறுமல்லி வேர், பெருமல்லிவேர், சிறுநெருஞ்சிவேர்
- ஆசிரியர் காரியாசான்
- சமணர்
- மொத்தம் 102 பாடல்கள்
- தோல்கள்ளைக் காட்டிப் பசுவைக் கறக்கும் பழக்கம் கொடியது என்று கூறுகிறது

## 16. முதுமொழிக்காஞ்சி

- ஆசிரியர் கூடலூர்கிழார்
- 5ஆம் நூற்றாண்டு
- இங்குறு நூற்றைத் தொகுத்தவரும் கூடலூர் கிழாரே ஆவார்
- மொத்தம் 100 பாடல்கள் உள்ளன
- பத்துப் பிரிவு, பிரிவுக்குப் பத்துப் பாடலுமாக உள்ளது
- சிறந்த பத்து, அறிவுப் பத்து, பழியாப்பத்து, துவ்வாப்பத்து, அல்லபத்து, இல்லை பத்து, பொய்ப்பத்து, எளியபத்து, நல்கூர்ந்தபத்து, தண்டரப்பத்து
- ஒவ்வொரு பத்தும் 'ஆர்கலி உலகத்து' என்று தொடங்குகிறது
- இதன் பாடல்கள் குறள்வெண் செந்துறை என்று யாப்பால் ஆனவை.
- நிலையாமையைப் பாடும் நூல்
- காஞ்சி என்ற புறத்திணையால் பெயர்பெற்ற நூல்

*மேற்கோள்*

> "***ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்***
> ***ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை***"
> "***வண்மையிற் சிறந்தன்று வாய்மை உடைமை***"
> "***மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை***"
> "***இளமையிற் சிறந்தன்று மெய்பிணி இன்மை***"

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

*"இசையிற் பெரியதோர் எச்சம் இல்லை"*
*"ஈரம் உடைமை ஈகையின் அறிப்"*
*"நலன் உடைமையின் நாணு சிறந்தன்று"*
*"குலன் உடைமையின் கற்புச் சிறந்தன்று"*
*"அறியாத தேயத்து ஆசாரம் பழியார்"*

## 17. ஏலாதி

- மருந்தால் பெயர் பெற்ற நூல்
- ஏலாதி என்பதற்கு 'ஏலத்தை முதலாக உடையது' என்று பொருள்
- ஏலம், இலவங்கம், சிறு நாவல் பூ (தக்கோலம் / நாககேசரம்) சுக்கு, மிளகு, திப்பிலி என்ற ஆறும் ஏலாதி எனப்படும்
- மொத்தம் 80 பாடல்கள் உள்ளன
- ஒவ்வொரு பாடலிலும் ஆறு கருத்துகள் இடம் பெற்றுள்ளன.
- ஆசிரியர் கணிமேதாவியார்
- திணைமாலை நூற்றைம்பதின் ஆசிரியரும் இவரே.
- சமணர்
- உணவு கொடுத்து ஆதரிப்போர் பெருவாழ்வு பெறுவர் என்பதை 21 பாடல்களில் கூறும் நூல்
- முற்பிறவியில் மாணவர்களுக்கு உணவு, உடை, எழுத்தாணி, புத்தகம் போன்றன கொடுப்போர் இப்பிறவியில் புலவர் போற்றும் வண்ணம் வாழ்வர்.

### மேற்கோள்

*"தாய்இழந்த பிள்ளை தலைஇழந்த பெண்டாட்டி*
*வாய்இழந்த வாழ்வினார், வணிகம் போய்இழந்தார்*
*கைத்துண்பொருள் இழந்தார் கண்இலவர்க்கு ஈந்தார்*
*வைத்து வழங்கிவாழ் வார்"*

## 18. கைந்நிலை

- அகநூல்
- ஆசிரியர் புல்லங்காடனார்
- மொத்தம் 60 பாடல்கள்
- இந்நூலுக்கு ஐந்திணை அறுபது என்று வேறு பெயரும் உண்டு
- இதன் பாடல்கள் சில சிதைந்து போய் உள்ளன

### மேற்கோள்

*"ஆத்தை குறங்கலி கொன்ன நம் ஆடவர்*
*காய்ந்து கடிர்தெறாஉம் காளம் கடந்தார் பின்*
*ஏந்தல் இளமுலை நார்எயிற்றாய்! கடந்தார் பின்*
*நீந்து நெடுவிடைச் சென்றி என்நெஞ்சு"*

**இன்னிலை**

- ஆசிரியர் பொய்கையார்
- களவழி நாற்பதின் ஆசிரியரும் இவரே
- 45 பாடல்கள் உள்ளன
- நான்கு பால்கள் கொண்ட நூல். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால், வீட்டுப்பால்.
- இதன் வீட்டுப்பால் இல்லியல் தறவியல் என்ற இரு பகுதிகளைக் கொண்டது

## மேற்கோள்

"***ஒத்த உரிமையளா ஊடற்கு இனியளாக்***
***குற்றம் ஒருடம் குணத்தளாக் – கற்றறிஞர்ப்***
***பேணும் தகையளாக் கொண்கன் குறிப்பறிந்து***
***நாணும் தகையளாம் பெண்***"

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நீதி நூல்களின் எண்ணிக்கை 11.

1. நாலடியார் 2. நான்மணிக்கடிகை 3. இன்னா நாற்பது 4. இனியவை நாற்பது 5. முப்பால் 6. திரிகடுகம் 7. ஆசாரக்கோவை 8. பழமொழிநானூறு 9. சிறுபஞ்ச மூலம் 10. முதுமொழிக் காஞ்சி 11. ஏலாதி

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் அக நூல்களின் எண்ணிக்கை 6

1. கார் நாற்பது 2. ஐந்திணை ஐம்பது 3. ஐந்திணை எழுபது 4. திணைமொழி ஐம்பது 5. திணைமாலை நூற்றைம்பது 6. கைந்நிலை

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் புறநூல் 1. களவழி நாற்பது
- இன்னிலை, கைந்நிலை என்ற இரு நூல்கள் உள்ளன. இவற்றுள் ஏதேனும் ஒன்றை மட்டுமே ஏற்பர்.
- 2010இல் தமிழ்ப்பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள 'செம்மொழித் தமிழ் – இலக்கண இலக்கியங்கள்' என்ற நூலில் கைந்நிலை என்ற நூல் மட்டுமே இடம் பெற்றுள்ளது.
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இரு நூல்களை எழுதியவர்கள்

1. கணிமேதாவியார் – திணைமாலை நூற்றைம்பது, ஏலாதி
(2. பொய்கையார் – களவழி நாற்பது, இன்னிலை)

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மருந்தால் பெயர்பெற்ற நூல்கள் மூன்று:

  1. திரிகடுகம் 2. சிறுபஞ்சமூலம் 3. ஏலாதி

- நீதிநூல்களில் சிறியது – இன்னா நாற்பது, இனியவை நாற்பது
- நீதி நூல்களில் பெரியது – திருக்குறள்
- அகநூல்களில் சிறியது – கார் நாற்பது
- அகநூல்களில் பெரியது – திணைமாலை நூற்றைம்பது
- இரட்டை அற நூல்கள் இன்னா நாற்பது, இனியவை நாற்பது

## பிற்கால நீதி நூல்கள்

### 1. ஆத்திசூடி

- ஆசிரியர் ஔவையார்
- தமிழ் இலக்கியநூல் ஆசிரியர்களில் மிகவும் புகழ்பெற்றவர்
- 12 ஆம் நூற்றாண்டு
- ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
  ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே
  என்று இந்நூல் சிவபெருமான் வணக்கத்துடன் தொடங்குகிறது
- ஆத்திமாலை அணிந்த இறைவன் சிவபெருமான்.
- 'ஆத்திசூடி' என்ற நூலின் தொடக்கத்தால் இந்நூல் பெயர்பெற்றது.
- அகர வரிசையில் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.
- ஓர் எழுத்துக்கு ஒரு பாடலாக மொத்தம் 108 பாடல்கள் உள்ளன.
- ஓர் அடியால் மட்டுமே ஒரு பாடல் அமைந்துள்ளது. இதற்கு "ஓரோவடி யானும் ஓரேவிடத்து இயலும்" என யாப்பருங்கலம் விருத்தியுரை மேற்கோள் காட்டப் இலக்கணம்
- ஓர் அடியில் இருசீர்கள் மட்டுமே உள்ளன.
- சிறுவர்கள் மனப்பாடம் செய்வதற்கு ஏற்ற வடிவில் உள்ளது.
- ஓரடியால் நாற்பொருளைக் கூறும் நூல்.
- இதே அமைப்பில் பிற்காலத்தில் பல ஆத்திசூடி நூல்கள் பல தோன்றின.

**காண்க:** பிற்கால ஆத்திசூடிகள்,
அறம் செய விரும்பு
இளமையில் கல்